செய்தி வெளியீடு எண்: 40 நாள் :14.01.2011

# தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாளையொட்டி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தின் 6 ஆயிரத்து 352 பணியாளர்களுக்கு 63 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழ்ப் புத்தாண்டு–பொங்கல் திருநாள் கொண்டாடப் படுவதையொட்டி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் பணிபுரியும் பணியாளர்களில் கடந்த 2010ஆம் ஆண்டில்,

200 நாள்களுக்கு மேல் பணிபுரிந்துள்ள பணியாளர்களுக்கு தலா 1000 ரூபாய்;

151 நாள் முதல் 200 நாட்கள் வரை பணிபுரிந்துள்ள பணியாளர்களுக்கு தலா 400 ரூபாய்;

91 நாள் முதல் 150 நாட்கள் வரை பணிபுரிந்துள்ள பணியாளர்களுக்கு தலா 240 ரூபாய்;

90 நாட்களும் அதற்குக் குறைவாகப் பணிபுரிந்துள்ள பணியாளர்களுக்கு தலா 145 ரூபாய்

– வீதம் 6 ஆயிரத்து 352 பணியாளர்களுக்கு மொத்தம் 63 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகையாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.